



ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் எக்கட்டாம்பாளையம் ஊராட்சி தட்டார்வலசு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கிணற்றிற்கு மின் மோட்டார் பொருத்தி திருமலைநகர் வரை பைப் லைன் அமைத்து குடிநீர் திட்டம் பணியினை பொதுமக்களுக்கு வழங்கி, முதலமைச்சர் கிராம் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுப்பாளையம் நொய்யல் சாலை முதல் சொக்கம்பாளையம் வரை, மேட்டூர் சாலை முதல் சரளைகாடு வரை தார்ச்சாலை அமைக்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் இல.பத்மநாபன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குனர் ரெ.சதீஷ், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் காயத்ரி இளங்கோ, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எஸ்.ஆர்.எஸ்.செல்வம், எஸ்.எம்.ராமசாமி, சி.பிரபு, கொடுமணல் கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமை! அமுர்தவிஜயகுமார் வரவேற்புரை!

# செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் திருக்கடையூரில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்!

### கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

மயிலாடுதுறை, செப். 25 -

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முப்பெரும் விழா பொதுக் கூட்டம் திருக்கடையூர் சன்னதி தெருவில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். செம்பனார்கோயில் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் அமுர்தவிஜயகுமார் வரவேற்புரையாற்றினார். ஒன்றிய அவைத்தலைவர் எஸ்.கோபால், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் எம்.மணிமாறன், கோ. தெட்சிணாமூர்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் பா.கணேசன், க.சங்கர், சாந்திவேல்முருகன், பொருளாளர் ஜி.கருணாநிதி, மாவட்டப் பிரதிநிதி எம்.சிவக்குமார், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பி. பாஸ்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துளசிரேகாரமேஷ், திருக்கடையூர் ஊராட்சி மன்றதலைவர் ஜெயமாலதி சிவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செம்பனார்கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக் ஆகியோர் தொடக்க உரையாற்றினார்கள். கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தலைவருமான திண்டுகல் ஐ. லியோனி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், என்.இளையபெருமாள், பஞ்சு.குமார், பி. முருகமணி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ஏ.ஆர்.ராஜா, நகரக் கழகச் செயலளார்கள் குண்டாமணி (எ)என். செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவாதாஸ், ஹர்ஷத், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், சுபா நெடுஞ்செழியன், ஒன்றிய குழு தலைவர்கள் நந்தினி ஸ்ரீதர், மகேந்திரன், அரசு வழக்கறிஞர் இரா. சேயோன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், முருகன், காளி தேசப்பன், பிரபாகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வினோத் பாண்டியன், ஜெ.ஜுபையர், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பரிதி, மாவட்ட விவசாய அணி தலைவர் நாகப்பன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகநிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணிதுணைஅமைப்பாளர் இரா.செந்தில் நன்றி கூறினார். கூட்டத்தில் டி மணல்மேடு ஊராட்சியை சேர்ந்த அ.தி.மு.க உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 30 குடும்பத்தினர் அ.தி.மு.க. முன்னாள் கிளை செயளலாளர் பழனி தலைமையில் அக் கட்சிகளில் இருந்து விலகி கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர் அமுர்தவிஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு வேட்டி, புடவை மற்றும் இருவண்ண ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

### தமிழ்நாடு செய்தி – மக்கள் தொடர்புத் துறை சார்பில்

# 6 பத்திரிகையாளர்களுக்கு ரூபாய் பத்து இலட்சம் மருத்துவ நிதி!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, செப். 25 -

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பத்திரிகையாளர் நலநிதித் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் (23.9.2024) தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலகத்தில் உடல் நலம் குன்றி மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்ட 6 பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் 10 இலட்சத்து ஆயிரத்து 206 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் 14.1.2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி புதிய திட்டமாக பத்திரிகையாளர் நல நிதியம் உருவாக்கப்பட்டது. அன்று அரசின் 1 கோடி ரூபாய் முதலீட்டுடன் தொடங்கப்பட்ட பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி வழங்கிட வழி செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பத்திரிகையாளர் நல நிதித் திட்டத்தின் கீழ் 19.7.2022 அன்று பிறப்பித்த அரசாணையின்படி பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் போது ஏற்படும் மருத்துவச் செலவினை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு நிதியுதவியாக ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரம் வரையும் பத்திரிகையாளர் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதித் தொகையிலிருந்து 50 சதவிகித தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (23.9.2024) சென்னை தலைமைச் செயலகத்தில் 6 பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவியாக மொத்தம் ரூ.10, 01,206/க்கான காசோலைகளை வழங்கினார். மேலும், செய்திமக்கள் தொடர்புத்துறை மூலமாக கடந்த 2021 முதல் தற்போது வரை பத்திரிகையாளர் நல நிதித் திட்டத்தின் கீழ் 13 பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் ரூ.25,11,339/ம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில், மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல் படி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், மாநில மாணவரணி செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான எழிலரசன் ஆகியோரின் ஆலோசனைப்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுகவில் உள்ள ஒன்றிய, நகர மற்றும் டவுன் பஞ்சாயத்து திமுக மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்பிற்கான நேர்காணல், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அரங்கம், பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் மோகன், தமிழரசன், பொன்ராஜ், கோகுல், ஆனந்த், தமிழ், அமுதரசன், மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, வரவேற்றார். மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் எம்.பி.கவுதம், ஜெயபிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்தியசீலன் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (23.9.2024) தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு மின்சாரவாரியத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜேஷ்லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர்முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு நிலநிர்வாக ஆணையர் முனைவர் கே.எஸ்.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேந்தாக்குடி மாரியம்மன் கோவில் அருகில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்படவுள்ள கலையரங்க கட்டிடப் பணியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 20.09.2024 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கும்பகோணம் கலைஞர் கோட்டம் திறப்பு விழாவிற்கு வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு தி.மு.க. சார்பில் பிரமாண்ட வரவேற்பு!

### தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், செப். 25 -

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கும்பகோணம் கலைஞர் கோட்டத்தை திறக்க வருகைதரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நலத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சையில் உற்சாக வரவேற்பு அளிக்க கழகத் தேழர்களுக்கு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : கும்பகோணம் கலைஞர் கோட்டம் திறப்பு விழாவிற்கு தஞ்சை மேலவஸ்தாச்சாவடி (தமிழ்பல்பலைக்கழகம்)வழியாக இன்று (25.09.2024 - புதன்) மாலை 07.00 மணியளவில் வருகைத்தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நலத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அதுசமயம் குறித்த நேரத்தில் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## தேனி செஞ்சுரி செல்வம் தாயார் மறைவு!

தேனி , செப். 25 -

தேனி மாவட்டம் முன்னாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவரும், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், இப்கோ சிறப்பு பிரதிநிதியு மான செஞ்சுரியின் மனைவியும், தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் தாயாருமான பாப்பா அவர்கள் மறைவையொட்டி, ஆண்டிபட்டி அருகே உள்ள அணைக்கரைப்பட்டி அவரது கிராம இல்லத்தில் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி, மகாராஜன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில செயல்திட்ட குழு உறுப்பினர் மூக்கையா, உள்பட கழக ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட மூத்த கழக முன்னோடிகள் அனைவரும் வந்திருந்து அஞ்சலி செலுத்தினர்.



கந்திலி ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.6.93 கோடி மதிப்பில் பி.எம்.ஜி.ஒய்.சி. திட்டத்தின் கீழ் சாலை அமைப்புப் பணிகளை சி.என்.அண்ணாதுரை எம்.பி., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கி வைத்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், பொன்னன்விடுதி கிராமத்தில் அமைந்துள்ள, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் செயல்பாடுகள் மற்றும் தூய்மை தன்மை குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, நேற்று முன்தினம் (23.09.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.